சுருக்கம்

விருதுகள் – வங்கியாளர் விருது – மாநில அளவில் மகளிர் திட்டத்தில் சிறப்பாகச் செயலாற்றிய சிறந்த வங்கிகள் மற்றும் தனிப்பட்ட வங்கிக் கிளைகளுக்கான விருது வழங்குதல் – விருது பெறும் வங்கிகள் தேர்வு செய்யப்பட்டது – ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை

அரசாணை (நிலை) எண்.128

நாள்: 11.11.2009
ஐப்பசி: 25,
திருவள்ளுவர் ஆண்டு 2040
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.186, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி3) துறை, நாள் 22.12.2008.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 32 அவர்களின் நேர்முக கடித எண்.833/நுக/2009, நாள் 5.11.2009.

*******

ஆணை:-

முதலாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், வங்கியாளர்களின் சிறந்த சேவையினைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு ஆண்டிலும் சிறப்பாகச் செயல்படும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை கௌரவிக்கும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவிலான வங்கியாளர்களுக்கான விருதினை ஏற்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது. இதன்படி, மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும், கீழ்கண்டபடி இந்த விருதுகள் வழங்கப்படும்.

(அ) மாநில அளவில் சிறந்த சாதனை புரிந்த மூன்று வங்கிகளுக்கான பாராட்டுச் சான்றிதழுடன்கூடிய விருது.

(ஆ) சுய உதவி குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்காக மட்டும் செயல்படும் இரண்டு சிறந்த சாதனை புரிந்த வங்கிக் கிளைகளுக்கு விருது.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ... | ரூ.1.00 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | ... | ரூ.75,000/– |

(இ) பிற பிரிவின் கீழ் சிறந்த சாதனை புரிந்த மூன்று வங்கிக் கிளைகளுக்கு விருது.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ... | ரூ.1.00 இலட்சம் |
| இரண்டாம் பரிசு | ... | ரூ.75,000/– |
| மூன்றாம் பரிசு | ... | ரூ.50,000/– |

(தபிபா)

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு மேலாண்மை இயக்குநர், மாநில அளவிலான விருதுக்காக வங்கிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்றும் இவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்ய தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவிலான தேர்வுக் குழு 2.11.2009 அன்று கூடி, 2008–09 ஆம் ஆண்டு விருதிற்கான சிறந்த வங்கி மற்றும் சிறந்த வங்கிக் கிளைகளை தேர்வு செய்ய நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து விருது வழங்குவதற்கான வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை பரிந்துரை செய்து இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அவரது செயற்குறிப்பில் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் அவற்றை வரிசைப்படுத்தியுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பை ஆய்வு செய்த அரசு, சிறந்த வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கான விருது வழங்க, பின்வரும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை தேர்வு செய்து ஆணையிடுகிறது.

I. மாநில அளவில் சிறந்த சாதனை புரிந்த **மூன்று வங்கிகளுக்கான** பாராட்டு சான்றிதழுடன் கூடிய விருது வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ள வங்கிகள்:

| வ. எண். | வங்கியின் பெயர் |
|---|---|
| 1. | இந்தியன் வங்கி |
| 2. | பாரத ஸ்டேட் வங்கி |
| 3. | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |

II. சுய உதவி குழுக்கள் / மகளிர் தொழில் முனைவோருக்காக மட்டும் செயல்படும் வங்கிக் கிளைகளில் சிறந்த சாதனை புரிந்ததற்கான விருது வழங்க பின்வரும் வங்கிக் கிளைகளை அவற்றின் எதிரே குறிப்பிட்ட பரிசுக்காக தேர்வு செய்துள்ளது.

| வ. எண். | வங்கிக் கிளைகள் | பரிசு விவரம் |
|---|---|---|
| 1. | இந்தியன் வங்கி, மைக்ரோசாட் –I | முதலிடம் |
| 2. | இந்தியன் வங்கி மைக்ரோசாட்–II | இரண்டாவது இடம் |

4. மேலும், பிற பிரிவின் கீழ் சாதனை புரிந்த வங்கி கிளைகளில், இந்தியன் வங்கி காவேரிப்பட்டினம் கிளை மற்றும் இந்தியன் வங்கி மத்தூர் கிளை ஆகிய இரண்டு வங்கிக் கிளைகளும் சம மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது. எனவே, சிறப்பு நேர்வாக, மூன்றாவது பரிசை இவ்விரண்டு வங்கிக்கிளைகளுக்கும் (இரண்டு பரிசுகள்) வழங்கலாம் என முடிவு செய்து அரசு பின்வரும் வங்கிக் கிளைகளை அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்ட பரிசுக்காக தேர்வு செய்துள்ளது.

(தபிபா)

## பிற பிரிவுகளின் கீழ் சாதனை புரிந்த வங்கிக் கிளைகள்

| வ. எண். | வங்கிக் கிளைகள் | பரிசு விபரம் |
|---|---|---|
| 1. | இந்தியன் வங்கி, உசிலம்பட்டி | முதலிடம் |
| 2. | இந்தியன் வங்கி, புளிக்கரை | இரண்டாவது இடம் |
| 3. | இந்தியன் வங்கி, காவேரிப்பட்டினம் | மூன்றாவது இடம் |
| 4. | இந்தியன் வங்கி, மத்தூர் | மூன்றாவது இடம் |

5. மாநில அளவில் மகளிர் திட்டத்தில் சிறப்பாகச் செயலாற்றிய சிறந்த வங்கிகள் மற்றும் தனிப்பட்ட வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் வழங்கப்படும் இடம் மற்றும் நாள் பற்றிய விபரங்கள், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரால் பின்னர் தனியாக அறிவிக்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:–
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 032.
விருது பெற்ற வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகள்
(தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 600 035
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018.

நகல்:-
மாண்புமிகு துணை முதலமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரது தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித்துறை, சென்னை – 600 009,
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.